உ

திருச்சிற்றம்பலம்

கோவை கிழார்
வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின்
சத்வித்யா சன்மார்க்க சங்கப் பொன்
விழாவின்போது நடைபெற்ற பாராட்டு
விழாவில் வெளியிடப் பெற்றது.

வெளியீடு :

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கல்வி நிலையம்
பேரூர் - கோவை-10.

1966.

விகவாவசு ஆண்டு

மாசித்திங்கள்—மாசிமகம்

திருவள்ளுவர் ஆண்டு (ககூகூஎ)

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1



சித்தாந்தப் புரவலர், சைவ ஞாயிறு, செந்தமிழ்ப் புரவலர்,
தமிழ்க் கல்லூரி முன்னுள் முதல்வர்

கோவைக்கிழார். ம- இராமச்சந்திரஞ் செட்டியார், பீ.ஏ., பீ.எல்.,

பதிப்புரை

கோவை கிழார் திரு. ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் கொங்கு நாட்டின் தலை சிறந்த வரலாற்றுப் பேரறிஞர். தமிழுக்கும், சைவத்துக்கும் இவர் செய்துள்ள பணிகள் அளப்பில.

பண்டு தொட்டு இவர் நமது திருமடத்துடன் தொடர்புடையவர். நமது திருமடம் இன்று இத்தகைய உயர்நிலையை அடைந்ததற்குக் காரணமான பெருமக்கள் பலருள் இவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இவருக்கு இப்பொழுது எழுபத்தெட்டாவது ஆண்டு நடைபெறுகிறது. ஆயிரம் பிறை காண் இம் மூதறிஞரை நமது சத்வித்யா சன்மார்க்க சங்கப் பொன் விழா நடைபெறும் சமயத்தில் பாராட்டுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இப்பாராட்டு விழாவின் அங்கமாய் இந்நூலை வெளியிடுகின்றோம். இந்நூல் இவர் வாழ்க்கைக் குறிப்புகளைச் சுருங்கிய அளவில் தொகுத்துக் கூறும்.

இப் பெரியார் சாந்தலிங்கப் பெருமான் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ்க என வாழ்த்துகின்றோம்.

கல்வி நிலையத்தார்.

36/3

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கியாது மோர் குறைவிலே
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வள நகர்ப்
பெண்ணி னல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!

எழுவாய்:-தொழில் வளம் நிறைந்த கோவை நகரில் திருச்சிப் பாதையில் 232 ஆம் எண் உள்ள இல்லத்திற்குச் சென்ருல் ஆங்கோர் அறையில் புத்தக அடுக்குகள் சூழ்ந்திருக்க ஒரு நாற்காலியில் மூத்து நரை முதிர்ந்த மூதாளர் ஒருவர் எதையோ சிந்தித்து எழுதிக்கொண்டும் இடையிடையே புத்தகத்தைப் புரட்டிக் கொண்டும் உட்கார்ந்திருக்கக் காணலாம். இந்த வயதிலுமா எழுத்து வேலே! எழுத்தில் இத்துணே ஆசையா? இது வீடா? நூலகமா! ஒரு தனி மனிதன் இவ்வளவு நூல்கள் ஈட்டி வைத்திருக்க முடியுமா! என்றெல்லாம் நினேந்து மனம் மருளும். நிற்போர் நிழல் கண்ட அவர் கடிதில் திரும்பிப் பார்த்துப் பெரியரென்றும், சிறியரென்றும், வேற்றுமை பாராட்டாது நகை முகம் முந்த இன்சொல் தொடர வரவேற்று உரையாடுவார். அவர் தான் எங்கள் கோவை கிழார். அவருக்கு வயது எழுபத்தெட்டு நடைபெறுகிறது. அவர்தம் வாழ்நாளில் அடைந்த அனுபவங்களும், செய்த செயற்கருஞ் செயல்களும் மிகப்பல; நம்போன்ருர்க்கு இலக்காய் அமைவன. அவர் தவத்திரு. சாந்தலிங்கர் திருமடம், சத் வித்யா சன்மார்க்க சங்கத்துடனும் கல்லூரி, பள்ளிகளுடனும் பெரிதும்தொடர்புடையவர். சங்கத்தின் பொன்விழா நாளில் அவரைப் பாராட்டி நன்றி செலுத்து முகத்தான் அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சிலவற்றை நினேந்தும், நினேப்பித்தும், மகிழ்வது தக்கதே!

பிறப்பு:-கோவை கிழார் தேவாங்கர் குலத்தில் புகழ் பெற்ற மேடும் குடும்பத்தில் திரு. மருதாசலம் செட்டியாருக்கும் கோனம்மாளுக்கும், பிறந்த ஆண் மக்களுள் இரண்டாமவரா கச் சர்வதாரி ஆண்டு கார்த்திகைத் திங்கள் பத்தொன்பதாம் நாள் தமிழும் இந்து சமயமும் தழைக்கும்படிக் கொங்கு நாடு செய்த புண்ணியத்தால் பிறந்தார்கள். இவருடன் பிறந்தவர்கள் இருவர் ஆண் மக்களும் அறுவர் பெண் மக்களுமாவர்.

இளமை:-இவர் பிறந்த குடும்பம் மிக்க புகழுடையதாய் இறையுணர்வில் தலை சிறந்ததாய் விளங்கிற்று. இக் குடும்பத்தினருள் இவருடைய சிறிய தந்தையார் கிரிய செட்டியார் என்பவர் கோவை நகரத்துப் புகழ்பெற்ற பெரியார்களுள் ஒருவராய் விளங்கினர். இவரே கோவை கிழாருடைய பிற்காலச் சிறப்புக் களுக்கெல்லாம் இளம் பருவத்தில் வித்திட்டார் எனக் கூறலாம். இவரிடம் பெற்ற பயிற்சியாலே கோவை கிழாருக்கு இளம் பருவத்திலேயே கல்வி கேள்விகளில் ஆர்வமும், சமயத் துறையில் ஊற்றமும், பொதுப்பணி புரியும் நோக்கமும் உண்டாயின.

கல்வி:-கோவை கிழார் தமது ஆறும் வயதில் நகரசபை தொடக்கப் பள்ளியிற் சேர்ந்து கல்வி பயின்றார். இதுவன்றிப் பெற்றோர்கள் இவருக்குத் தனியே ஓராசிரியரை நியமித்தும் கல்வி கற்பித்தனர். பின்னர் 1899.ல் லண்டன் மிஷன் பள்ளியில் சேர்ந்து முதற்படிவம் தொடங்கி மூன்றும் படிவம் வரை பயின்றார். 1904 ல் மெட்ரிகுலேஷன் தேர்விலும் 1906ல் F. A; தேர்விலும் வெற்றி பெற்றார். பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து 1908 ல் B. A., தேர்ச்சியும் பின்னர் நான்காண்டுகள் சட்டக் கல்லூரியில் பயின்று 1912 ல் B. L., தேர்ச்சியும் பெற்றார்.

பன்மொழிப் பயிற்சி:-இவருக்குக் கோவை நகரில் புகழ் பெற்ற தமிழறிஞர்களாக விளங்கிய திரு. திருச்சிற்றம்பலம் பிள்ளை, சபாபதிப் பிள்ளை, என்பவர்கள் தமிழ் அறிவு ஊட்டினர். சென்னையிலிருந்த காலத்தில் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரிடம் தமிழ்க் கல்வி பயின்றார்.

வடமொழி, தெலுங்கு, கன்னடம் ஆகியவற்றிலும் நல்ல பயிற்சி உண்டு. இந்தி, உருது, மலேயாளம் ஆகியனவும் அறிவார்.

தொழில்:-சட்டப் படிப்பு முடித்தவுடன் 1913ல் கோவை நகரில் வழக்கறிஞராகத் தொழில் தொடங்கினர். தொழிலில் நேர்மையுடன் நடந்து பெரும் புகழீட்டினர்: 1928 முதல் ஐந்தாண்டுகள் கோவை நீதி மன்றத்தில் அபீஷியல் ரிஸீவராகப் பணியாற்றினர். இத்தொழில்களிலெல்லாம் இவருக்கு மன நிறைவைத் தரவில்லை. ஆசிரியத் தொழில் அல்லது ஆராய்ச்சித் தொழில் மேற்கொள்ள வேண்டும் என்பதே இவர் விருப்பமாக இருந்தது. 1940 முதல் ஓய்வு பெறும் வரை இந்து அறநிலையம் பாதுகாப்புத் துறையில் ஓர் ஆணையாளராகப் பணியாற்றினர்.

தொழில் நடத்திய காலங்களில் பல நிறுவனங்களில் நிலையங்களில், கழகங்களில், பங்கு கொண்டு நடத்தி வந்தார். ஓய்வு பெற்ற பின்னரும் இப்பணிகள் தொடர்ந்து செய்யப்பட்டன.

பல கழகங்களில் தொடர்பு:- இளம் பருவத்திலேயே தேவாங்க சிறுவர் சபை என்ற ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார். கிராம ஊழியர் சங்கத்தில் உறுப்பினராய் இருந்து பணி செய்தார். தனது சிறிய தகப்பனரைப் பின்பற்றி இவரும் நகரசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பத்து ஆண்டுகள் சேவை செய்திருக்கிறர். 1918 ல் நகரசபையின் துணைத் தலைவராக ஆனர். நகர சபையினரால் மாவட்டக் கல்விச் சங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு முறை துணைத்தலைவர் பதவியும் நான்கு முறை தலைவர் பதவியும் வகித்தார். மற்றும் மத்தியக் கல்விச் சங்கம், கலால் ஆலோசனைச் சங்கம், வைத்திய ஆலோசனைச் சங்கம், கோவை தாலூக்கா சங்கம் முதலியவற்றிலும் பங்கு கொண்டு பணியாற்றியுள்ளார். ஒருமுறை மாவட்டச் சபையின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழக உறுப்பின

ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1943,46 ஆகிய இரண்டு காலப் பகுதிகளில் பட்டதாரிகள் தொகுதியில் நின்று வெற்றி பெற்றுப் பல்கலைக்கழக உறுப்பினராக இருந்ததன்றி, அக் கடமிக் கவுன்சிலிலும் அங்கத்தினரானார். அண்ணாமலைப் பல் கலைக் கழகத்திலும் தமிழ் வளர்ச்சி ஆலோசகராய் இருந்தார். கோவையில் சிறப்பாக நடைபெற்று வந்த லண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளி (யூனியன் உயர்நிலைப் பள்ளி) பல இடை யூறுகளால் நின்று போகும் நிலையெய்தியபோது அதன் நிர் வாகக் குழுவில் உறுப்பினராய் இருந்து அதனை உயிர்ப்பித்தார். பல காலம் அதன் பொறுப்பினராகவும், பொருளாளராகவும் இருந்தார். இன்னும் அதில் உறுப்பினர் பதவி வகிக்கிறார். தேவாங்க உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்குரிய அரிய முயற் சிகள் மேற்கொண்டார். அதன் நிர்வாகக் குழுவிலும் இப் பொழுதும் உறுப்பினராய் இருக்கிறார். கோவைத் தமிழ்ச் சங் கத்தை சிவக்கவிமணி அவர்கள் தலைவராய் இருக்க இவர் செயலாளராய் இருந்து நடத்தி வந்திருக்கிறார். சேக்கிழார் திருக்கூட்டத்திலும் இவருக்குப் பங்கு உண்டு. சென்னை கையேட்டுப் பிரதிச் சாலை, தஞ்சை சரஸ்வதி மகால் புத்தக சாலை ஆகியவற்றிலும், இவருக்கு உறுப்பினர் இடம் உண்டு. ஆங்கில அரசாங்கப் பூவியல் சங்கத்தில் இவர் ஓர் அங்கத் தினர். கோவை அரசினர் கலைக் கல்லூரிப் பழைய மாணவர் கழகத்திலும் கோவை காஸ்மா பாலிடன் கிளப்பிலும் இப் பொழுதும் தலைவராக இருக்கிறார். இவையன்றிக் கூட்டுறவுச் சங்கம், இன்ஷுயூரன்ஸ் துறை முதலியவற்றிலும் இவர் இடம் பெற்றிருந்தார்.

சுருங்கச் சொன்னால் இவர் இடம்பெறாத கல்விக் கழகமோ, பொதுப்பணி மன்றமோ, சமயச் சபையோ பொழுது போக்குக் கழகமோ, பொது மாநாடுகளோ இல்லையென்றே சொல்லலாம். எந்த ஒரு நிறுவனம் தொடங்க வேண்டுமென் றாலும் அல்லது நசித்துப் போகும் நிலையில் இருப்பதற்கு உயிரூட்ட வேண்டுமென்றாலும் அதன் நிர்வாகத்தை இவரிடம்

ஒப்படைப்பது என்பது அக்காலத்து மக்களுக்கு ஒரு வழக்க மாக இருந்தது. இவரும் தடை சொல்லாமல் தன்னால் இயன்ற உடலுழைப்பு, பொருள், ஆலோசனை முதலியன உதவி வந்திருக்கிறார்.

அரசியல் தொடர்பு: இளமையில் சென்னையில் படித்த காலத்தில் கடற்கரையில் நடைபெற்ற தேசீய இயக்கக் கூட் டங்களுக்குச் சென்று வரும் வழக்கம் உண்டு. கோவையிலும், தேசீய சபை மாநாடு, பிராமணரல்லாதார் மாநாடு முதலிய வற்றில் கலந்துகொண்டார். தேசீய இயக்கத்தின் முக்கிய தலைவர்களுள் வ. உ. சி. போன்றவர்களோடும் இவருக்குப் பழக்கம் உண்டு. காந்திஜி, குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணன், துணைத்தலைவர் ஜாகிர் ஹுசேன் ஆகியவர்களை நேரில் கண்டு உரையாடி யிருக்கிறார்.

இவர் ஆற்றிய அரிய பணிகள்

குலப்பணி: தன் குலத்தவர் நெசவுத் தொழில் ஒன்றி லேயே நின்று அது தழைத்தக்கால் தழைந்தும், வறந்தக்கால் வறந்தும். துன்புறுவதைத் கண்டு அத்தொழில் வளம் பெருகுதற் பொருட்டுப் பல கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியும், மாநாடுகள் நடத்தியும், பணி புரிந்தார். வெளி மாநிலங்களில் உள்ள தன் குலத்தவர் முன்னேற்றத் திற்கும் பல மாநாடுகளில் கலந்து உழைத்திருக்கிறார். தன் குலத்தவரில் தன்னை ஒத்த ஒரு சிலரே உயர் படிப்புப் படித்தி ருப்பதை அறிந்து அனைவரும் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதற்காகத் தேவாங்க சிறுவர் சபை சாரதா பாடசாலை, தேவாங்க உயர்நிலைப்பள்ளி ஆகியன தொடங்கி நடை பெறுவதற்கு உழைத்தார். இப்பொழுது இக்குலத்தவர் பலர் உயர் கல்வி பெற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர். தன் குலத்தவர் வாழ்கின்ற இடங்களெல்லாம் நேரில் சென்று கண்டு அவர்களுக்குள்ள வசதிக் குறைவை அறிந்து நீக்குவதற்குப் பாடுபட்டார்.

பொதுப்பணி : சென்னையில் படித்த காலத்தில் சில மிஷனரிகளில் சேர்ந்து மதுவிலக்குப் பிரச்சாரம் முதலியன செய்திருக்கிறார். கோவைப் பகுதியில் கிராம ஊழியர் சங்கத்தில் சேர்ந்து ஊர்ப்புறங்களில் சுகாதாரம் பற்றி மக்களுக்குச் சொற்பொழிவுகளின் மூலமும் படக் காட்சிகளின் மூலமும் எடுத்துரைத்தார். சிறைக் கைதிகளுக்கு மூன்றுண்டுகளுக்கு மேல் கல்வி யறிவு, ஒழுக்க, சமய போதனைகள் செய்தார். வெள்ளப் பாழ், கொள்ளைநோய் முதலியன ஏற்பட்டகாலத்தில் நிவாரணச் சங்கங்கள் அமைத்துச் செயலாளராய் இருந்து ஆற்றிய பணிகள் குறிப்பிடத் தக்கன.

சமயப் பணி: இவர் சமய நிலையப் பாதுகாப்புத் துறையில் ஆணையாளராக இருந்தபோது சமய நிலையங்களின் வருவாயில் ஒரு பகுதியைச் சமய வளர்ச்சிச் செலவுக்கென ஒதுக்க வேண்டுமென்றும், அதைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகள், நூல் வெளியிடுதல், நூல் நிலையம் அமைத்தல் முதலியன செய்ய வேண்டுமென்றும் திட்டம் வகுத்தார். கோவில்களில் திருமுறை ஓதுதல், எழுதுதல் முதலியன செய்வித்தார். பல புலவர்களைக் கொண்டு தல வரலாறு முதலியன எழுதுவித்து அவர்களுக்கு ஊதியமும் கிடைக்க வகை செய்தார். சமயச் சொற்பொழிவாளர்கள் பலரை நியமித்தார். ஆலயக் கும்பாபிடேகங்கள் ஆகம முறைப்படி நடக்க வேண்டும் என்பதில் ஊற்றமுடையவராய் இருந்தார். கும்பாபிடேகங்களை முன்னின்று நடத்துவதற்கு சிவக்கவிமணி. சுப்பிரமணிய முதலியாரவர்களையும், சிவ ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்களையும் அனுப்பி வைப்பார். இங்ஙனம் நடத்தப்பட்ட கும்பாபிடேகங்களுள் குறிப்பிடத்தக்கவை, திருவாரூர், திருநெல்வேலி, திருச்செந்தூர் ஆகிய தலங்களில் நடைபெற்ற கும்பாபிடேகங்களாம். இவையெல்லாம் இத்துறையில் இவர்க்குமுன் ஒருவரும் செய்யாதன. சமயச் சான்றோர்கள், இச்செயல்களைப் பெரிதும் வரவேற்றனர். ஓதுவார்களிடத்தில் இவருக்குத் தனியான அன்பு உண்டு. கோவில்களுக்கு வரும்பொழுதெல்லாம் ஓதுவார்களுடைய பாடல்களை ஊன்றிக் கேட்பார். அவர்களுடன்

அன்பொடு அளவளாவுவார். தமிழில் அருச்சனை செய்யும் முறையையும் தொடங்கினர். பதவிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் 21—8—'61-ல் குன்றக்குடி அடிகளுடன் சேர்ந்து சென்னை முதலமைச்சரைக் கண்டு தமிழ் நாடெங்கும் தமிழில் அருச்சனை செய்யப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தினர். சேக்கிழார் திருக்கூட்டத்தில் அங்கம் வகித்துச் சிவக்கவிமணி அவர்களுடன் கேரள நாட்டுத் திருவஞ்சைக் களத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனர், குருபூசை நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வெற்றி பெற்றார். சைவசித்தாந்த சமாஜத்தில் பங்கு கொண்டு பல பணிகள் ஆற்றியிருக்கிறார்.

கல்விப் பணி: மாவட்டக் கல்விச் சங்கம், மத்திய கல்விச் சங்கம் ஆகியவற்றில் தலைமைப் பதவி வகித்த காலத்தில் தொடக்கக் கல்வி முறையைச் சீர்திருத்தி அமைத்தார். அதிக மான பள்ளிக் கூடங்கள், தொடங்க ஏற்பாடு செய்தார். ஆசிரியர்களின் பொருளாதாரத்தில் அதிகக் கவனம் செலுத்தினர். அடிக்கடி ஆசிரியர் சங்கக் கூட்டங்களைக் கூட்டி ஆசிரியர்களின் நிலைமையை அறிந்து உயர்கல்வி அதிகாரிகளுக்கும், அமைச்சருக்கும், தெரியப்படுத்தினர். ஆசிரியர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பாடுபட்டார். பதவியிலிருந்து நீங்கியபின் பல கல்விக் கூடங்களின் நிர்வாகக் குழுவில் உறுப்பினராய் இருந்து நடத்தி வருகிறார்.

கோவை மாவட்ட நூலகக் குழுவின் தொடக்க காலத்தில் தலைவராய் இருந்து சிறந்த முறையில் நூலகம் உருவாவதற்கும் பல கிளைகள் தோன்றுவதற்கும் அரும்பாடு பட்டார். இதில் ஐந்தாண்டு காலம் தலைவராய் இருந்தார்.

தமிழ்ப் பணி: இவர் கல்லூரியில் பயின்றது பௌதிகமும், சட்டமுமே என்றாலும் தமிழ் இலக்கியத்தில் நல்ல புலமை தனியே பெற்றிருந்தார். உரை நடையாகவும், செய்யுளாகவும் பல நூல்களை ஆக்கியுள்ளனர். ஆங்கிலக் கட்டுரைகள் பல

வற்றை மொழி பெயர்த்திருக்கின்ருர். பல சபைகளில் தமிழின் பெருமைகளே விளக்கிப் பேசி யிருக்கிருர். தமிழ் நாட்டின் வரலாறுகளேயும் புலவர்களின் வரலாறுகளேயும் கல்வெட்டின் துணைக்கொண்டு ஆய்ந்து தெளிவு செய்துள்ளார்.

தமிழ்க் கல்லூரி :—தமிழகத் தமிழ்க் கல்லூரிகளுள் மயிலம் கல்லூரியும், தருமபுரம் கல்லூரியும் தோன்றுவதற்கு இவர் பெரிதும் உதவியாய் இருந்தார். பேரூர் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் இளேயபட்டம், தவத்திரு. இராமசாமி அடிகள், தமிழ்க் கல்லூரி ஒன்று தொடங்க விரும்பி இவருடன் தொடர்பு கொண்டார். இவர்க்கும் கொங்கு நாட்டில் ஒரு தமிழ்க் கல்லூரி தொடங்க வேண்டும் என்னும் எண்ணம் முன்னரே இருந்தது. இதுவே தக்க சமயம் என்று மகிழ்ந்து திரு. ரா. க. சண்முகஞ் செட்டியார் அவர்களேயும் திரு. நா. மகாலிங்கம் அவர்களேயும் அணுகி இதுபற்றி உசாவினுர். பின்னர் திரு. வெ. சி. சுப்பைய கவுண்டர் அவர்களும் இதில் கலந்து கொண்டார். சுப்பைய கவுண்டரும், கோவை கிழாரும், முன்னரே சாந்தலிங்கர் திருமடத்துடன் தொடர்புடையவர்கள். பெரும் பொருள்கள் திரட்டப்பட்டன. பேரூர் தமிழ்க் கல்லூரிக் கழகம் என்னும் பெயரில் ஒரு கழகம் நிறுவப்பெற்றது. இதில் கோவைகிழார் செயலாளரராய் இருந்து பணியாற்றினுர். பல்கலேக் கழகத்தாருடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று 1953ஆம் ஆண்டில் பேரூர் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் தமிழ்க் கல்லூரி தொடங்கப்பெற்றது. தொடக்கத்தில் கோவைகிழார் அவர்கள் கல்லூரி முதல்வராகவும், பொருளாளராகவும் இருந்து பணியாற்றினுர். இப்பொழுது இவர் கல்லூரிக் கழகத்தின் துணைத் தலேவராக இருக்கிருர்.

இவர் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல செல்வரிடம் சென்று பொருள் வேண்டிப் பெற்ருர். கழகத்திற்குச் சந்தா செலுத்தும் உறுப்பினர்களே மிகுதியாகச் சேர்த்தார். கல்லூரிக்குத் தகுந்த கட்டிடங்கள் கட்டுவதற்கும், மாணவர்களுக்கு உணவு விடுதி வசதியளிப்பதற்கும், அரிய முயற்சிகள் மேற்

கொண்டார். ஏழை மாணவர்களுக்குப் பல செல்வர்களிடமிருந்து உதவி வாங்கிக் கொடுத்தார். கல்லூரியில் கொண்டாடப்பட்ட தனது பிறந்த நாள் விழாக்களில் நல்ல நூல்களை வழங்கினர். கல்லூரி நூலகத்திற்குத் தனது சொந்த நூல்களிலிருந்து ஆயிரக்கணக்கான நூல்களையும், பல அலமாரிகளையும் வழங்கினர். மற்றும் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் முயற்சியும் மேற்கொண்டார்.

திருமடத்தின் சார்பில் உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்கும் இவர் மிக உதவியாய் இருந்தார். மற்றும் சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் நடைபெறும் விழாக்கள் பலவற்றிலும் கலந்து சிறப்பித்திருக்கின்ருர். இளமைப் பருவம் முதலே இம் மடாலயத்திற்கு இவர் வந்து போவது வழக்கம். இவ்விரு திருமடங்களின் வளர்ச்சியிலும், இவருக்குப் பெரிதும் ஆர்வம் உண்டு.

இதழாசிரியர்:-இவர் கோவைத் தமிழ்ச் சங்கத்தில் செயலாளராய் இருந்த காலத்தில் 'கொங்கு மலர்' என்னும் மாத இதழுக்கு ஆசிரியராக இருந்து 1934 முதல் 37 வரை நடத்தி வந்தார். இதில் இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் சில புத்தகங்களாக வெளியிடப்பட்டன.

சென்னை சைவ சித்தாந்த சமாஜத்தின் பத்திரிகையான சித்தாந்தத்திற்கு 1947 முதல் 53 வரை ஆசிரியராக இருந்து நடத்தினர். இவர் ஆசிரியராய் இருந்த காலத்தில் பத்திரிகைகளில் வெளியிடப்படும் செய்திகளை பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு தலைப்பிலும் அததற்கேற்ற கட்டுரைகளாகத் தேர்ந்து வெளியிடும் பழக்கத்தை மேற்கொண்டார். இவரும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவ்வகையில் சித்தாந்தம் பத்திரிகை சுவை மிகுதியுடையதாய் விளங்கிற்று. சந்தாதாரர்களும் பெருகினர்கள்.

பதிப்பாசிரியர்:-சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தக சாலையில் உறுப்பினராய் இருந்து சோழன் பூர்வ பட்டயம்,

கொங்குதேச ராசாக்கள், பேரூர்க் கோவை ஆகிய நூல்களையும் தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் உறுப்பினராய் இருந்து இராமப்பய்யன் அம்மானை என்னும் நூலையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வழியாய்த் தமிழிசைக் கருவிகள் என்னும் நூலையும் பதிப்பித்திருக்கின்றார். இராமப்பய்யன் அம் மானை என்னும் நூல் பதிப்பைப் பத்திரிகைகள் எல்லாம் நன்கு மதித்துப் பாராட்டின. தமிழிசைக் கருவிகள் என்னும் நூலுக் குப் பல படங்கள் ஈட்டிக் கொடுத்துள்ளார்கள்.

நூலாசிரியர்:-இவர் எழுதியுள்ள சிறு கட்டுரைகள், ஆராய்ச்சிகள், வரலாறுகள், பயண நூல்கள், செய்யுள் நூல் கள் கணக்கிலடங்கா. பல அச்சிட்டு வெளியிடப்பட்டன. வெளி வராதன மிகப் பல. தான் எழுதியவற்றை ஒழுங்காகத் தொகுத்து அட்டை கட்டி 40 தொகுதிக்கு மேல் வைத்திருக் கின்றார். இவையெல்லாம் வெளியிடப்படுமாயின் தமிழ் மக்கள் பெரிதும் பயனெய்துவர். அரிய செய்திகளையும், எளிய நடை யில் மிகத் தெளிவாக எழுதும் ஆற்றல் இவருக்குண்டு. இவ் வகையில் எழுதியுள்ள குழந்தையர் சிவஞானம் என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. சைவ சித்தாந்தத்தை மிக அழகாகச் சிறு வர்களும் உணர்ந்து கொள்ளும்படி எழுதியிருக்கிறார். இவர் எழுதிய நூல்களுள் 'கொங்கு நாட்டு வரலாறு' என்னும் நூல் பெரும் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறது: இதனை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டிருக்கிறது. இப்பொழுது இவரு டைய 'கொங்கு வேள் வரலாறு' என்னும் ஆராய்ச்சிச் சொற் பொழிவு நூலை வெளியிடும் முயற்சியை இப்பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது. தனது வரலாற்றையும் செவ்விதின் எழு தித் தொகுத்து வைத்திருக்கின்றார். இவரெழுதி வருகின்ற நாட் குறிப்புக்களின் தொகுப்பு 4 நாற்பதிற்கு மேல் உள்ளன.

வெளி வந்த நூல்கள்

பாடல்

1. நாங்கள் எழுவர், 2. வான்விளி, 3. ஜயமதி 4. தமயனும், தங்கையும், 5. ஒரு துளி கடுகு. 6. மறைந்த பெருமை 7. இளைஞர் பாடல்கள், 8. கடவுள் வணக்கம், 9. சிறுகதை பிற்பகுதி, 10. வாழ்க்கையோ கவலையோ! 11. தெய்வங்களின் புலம்பல்கள் 12. திருவஞ்சைக்களம் செலவு 13. மண்டைக் காடு விழா, 14. கடோபநிஷத்து.

உரை நடை:-

1. கோயில் பூனை, 2. வீட்டு எலி, 3. காட்டு எருமை 4. யான் கண்ட இலங்கை 4(a) கடலின் கண் முத்து 5. நாங்கள் எழுவர், 6. சுந்தரரும் கொங்கும், 7. செயற்கை நலம், 8. மருத மலை மான்மியம், 9. பேரூர் வரலாறு, 10. பேரூர் மூர்த்திகள், 11. தேவாங்கர் குல வரலாறு, 12. கொங்கு நாட்டு வரலாறு 13. கொங்குக் கட்டுரைகள், 14. தேவியர் வரலாறு, 15. முட்டம் வரலாறு, 16. அண்ணூர் வரலாறு, 17. கலசை வரலாறு, 18. சமணமும் கொங்கும் அபய சந்து, 19. சிறுகதைத் திரள், 20. நாட்டுப்புறம், 21. இதுவோ எங்கள் கோவை; 22. நால்வர்களும் கல்வெட்டுக்களும், 23. சேக்கிழாரும் கல்வெட்டுக் களும், 24. சமாஜத் தலைமை உரைகள், (விருதுநகர்; மயிலம்) 25. ஆண்டு விழா தலைமை உரைகள், (தூத்துக்குடி; சாத்தூர்) 26. துறையூர் மாணவர் தலைமை உரை, 27. கல்வி மாநாடுகள் உரைகள், (கோவை) 28. தேவாங்க மாநாடு உரைகள் (கோவை; உப்பாடா.) 29. உடற்பயிற்சி மாநாடு உரைகள், (கோவை) 30. திருவாலங்காடு வரலாறு, 31. சமயங்கள், (கழக வெளியீடு) 32. தமிழ் இசைக் கருவிகள்.

நாடகங்கள்:-

1- வீழ்ச்சியும் மீட்சியும் 2. காஞ்சிமா தேவி, 3. சிவராத்திரி பெருமை, 4. நாட்டுப் பற்று, 5. சென்ற மைந்தன் வென்று வந்தது.

வாழ்க்கை நூல்கள்:-

1. கோவை கிழார், 2. சிவக்கவிமணி, 3. அப்பாவு, 4. இராமலிங்கர், 5. வெள்ளியங்கிரி கொங்கர், 6. சுப்பைய கவுண்டர், 7. விவேகானந்தர்.

வெளிவராதவை :-

1. ஆங்கிலப் பாக்கள், 2. கன்னடமும் களி தெலுங்கும், 3. மூன்று நவீனங்கள், 4. அநாதைப் பெண் (செய்யுள்), 5. யவனக் கதைகள், 6. மிசிரக் கதைகள் (செ), 7. கல்லும் பேசுகிறது, 8. இயற்கைவளம், 9. பெரியார்கள், 10. முகம்மது சரிதம், 11. திரு.வி.க., 12. என் கதை—25 ஆண்டு, 13.என் கதை—75 ஆண்டு, 14. மெய்ப்பாடு—இன்பம், 15. மெய்ப் பாடுஅவலம், 16. செருக்கின் வீழ்ச்சி, 17. பருவங்கள்—ஜன் னல்வெளியே, 18. திருப்பருப்பதம் செலவு, 19. திருவஞ்சைக் களம் செலவு, 20. இலங்கை—செலவு, 21. ஜான்சீராணி(நா) 22. க்ஷேத்திரப் பிள்ளைத் தமிழ் (செ), 23. சவுடாம்பிகை மாலை (செ), 24. மாரியம்மை 100 (செ), 25. சேல வரலாறு, 26. ஈரோடு வரலாறு, 27. கொங்கு நாட்டு இடப் பெயர்கள், 28. கைக் களஞ்சியம், 29. பெருங்கதை, (கொங்குவேள்), 30. இடிகரை வரலாறு, 31. குழந்தையர் சிவஞானம், 32. இலக்கியத்தில் தாவரம், 33. காவிரிக்கரையில், 34. இந் திய வரலாற்றுக் கதைகள், 35. துளசிதாசர் முதுமொழிகள், 36. சிவமகிமைத் தோத்திரம், 37. பொள்ளாச்சி வரலாறு, 38. தீமையாதோ, 39. அட்டிகை (நா), 40. காந்தி பொன் மொழிகள் (செ.)

கற்கப்படுவோர்: நூல் கற்பிக்கும் ஆசிரியத் தொழிலில் இவருக்கு விருப்பம் அதிகம். இவர் பார்த்து வந்த தொழில் அதற்கு இடையூருய் இருந்தது. பேரவைகளில் சொற்பொழி வாற்றுவதன் மூலமும், சமய வகுப்புகளில் (பாபநாசம், சிதம் பரம், முதலிய இடங்களில் நடைபெற்றன) பாடம் சொல்வ தன் மூலமும் அதனை நிறைவு செய்து கொண்டார். அலுவலி லிருந்து ஓய்வு பெற்ற பின்னர் 1953ல் பேரூர்த் தமிழ்க் கல்லூரியைத் தொடங்கி அதில் முதல்வராயும் அமர்ந்தார்.

அப்பொழுது வாரத்தில் இரண்டு நாட்கள் ஒவ்வொரு நாளும், இரண்டு இரண்டு மணி நேரங்கள் கல்வெட்டும், வரலாறும் பாடம் சொன்னர். பாடங்கள் மாணவர்களுக்குப் பயன் படும் வகையில் சுருக்கமாகவும், அரிய விளக்கங்களுடனும், நேரில் கண்டறிந்த அனுபவங்களுடனும் கற்பிப்பார். இவரு டைய வகுப்பை மாணவர்கள் மிக உவகையுடன் கேட்பர். முதுமை காரணமாக முதல்வர் பதவியிலிருந்து விலகி பின்ன ரும் பாடம் சொல்லும் ஆசையினல் வாரத்திற்கொரு நாள் வந்து ஒரு மணி நேரம் மாணவர்களுக்குச் சமயப்பாடம் கற்பிப்பார். இதில் கிடைத்த மகிழ்ச்சி வேறெதிலும் தனக்குக் கிடைத்ததில்லையென்று இவர் தன் குறிப்பில் எழுதியிருக் கின்ருர்.

ஆராய்ச்சியாளர் :– இதுவரை யாரும் அறிந்து எழுதாத கொங்கு நாட்டின் வரலாற்றினைச் செவிவழிச் செய்தி, இலக்கி யங்கள், நாட்டுப் பாடல்கள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றின் துணை கொண்டு ஆய்ந்து எழுதியுள்ளார். எந்தப் பொருளை ஆராய முற்பட்டாலும், அதன் பழைய வரலாற்றுச் சிறப்பை ஆராய்ந்தறிவார். தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தில் பங்கு கொண்டு பழங்காலத்து அணிவகைகளை எல்லாம் கல் வெட்டின் துணை கொண்டு ஆய்ந்து அவை வழக்கிலிருந்த காலங்களுடன் ‘அணிப்பித்து’ என்னும் தலைப்பில் எழுதி வெளிப்படுத்தி யிருக்கிருர். சென்னை மாநிலம் பூவியல் ஆராய்ச்சிக் கழகத்தில் தலைவராய் இருந்த பொழுது சென்னை மாநிலத்தைச் சார்ந்த இடப்பெயர்கள் பற்றி ஒரு ஆராய்ச்சி நடத்தினர். சென்னை மாநிலத்தில் வழக்குகள், விவகாரங்கள் என்பதைப் பற்றி ஒரு ஆராய்ச்சி நிகழ்த்தி ராஜாஜி தலை மையில் சொற்பொழிவு செய்தார். அதனை ராஜாஜி பாராட் டினர்.

கல்வெட்டுப் பேரறிஞர் : கல்வெட்டுக்களைப் படித்து அதில் சொல்லப்படும் செய்திகளை ஆராய்ந்து வெளியிடுவதில் அவர் தனித் திறமை படைத்தவர். பல கல்வெட்டுத் தொகுதி

களைச் சேர்த்து வைத்திருக்கிறார். எந்தச் செய்தியையும், கல்வெட்டுச் சான்றுடன் நிறுவுவார். ‘அடியார்களும் கல் வெட்டுகளும்’ என்னும் தலைப்பில் பல கட்டுரைகள் எழுதி யுள்ளார். சேக்கிழார் காலத்தைக் கல்வெட்டின் துணை கொண்டு நிறுவியுள்ளார். பல்கலைக் கழகத்தில் உறுப்பின ராய் இருந்த பொழுது கோவில்களில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படும் செய்யுள்களைக் கால முறைப்படி தொகுத்து அச்சிட வேண்டும் என்று முயன்றார்.

சொற்பொழிவு வல்லுநர் : சென்னையில் படிக்குங் காலத் திலேயே மறைமலை அடிகள் தலைமையில் ‘கந்த புராணம்’ என்னும் பொருள் பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். பல மாநாடுகளிலும் சென்னை, திருச்சி, வானொலிகளிலும் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இவராற்றிய தலைமை யுரைகள் பல அச்சிடப்பட்டுள்ளன. வெளி மாநிலங்களில் (ஆந்திரம், கன்னடம்) நடைபெறும் மாநாடுகளில் அவ்வம் மாநிலத்து மொழியிலேயே இவர் சொற்பொழிவு நிகழ்த்தியது குறிப்பிடத் தக்கது. ஆந்திர மாநிலத்தில், உப்பாடா, பாவோ முதலிய இடங்களில் தெலுங்கிலேயே உரை நிகழ்த்தியுள்ளார். பெல்காம் காங்கிரஸ் ஒசட்டியில் நடந்தபோது அதில் கலந்து கொண்டு கன்னடத்தில் உரை நிகழ்த்தியுள்ளார். விஜய நகரத்துக்கு ஹம்பியில் நடைபெற்ற 600 ஆண்டு மாகாநாட் டில் கலந்து கொண்டு ஆங்கிலத்திலும், கன்னடத்திலும், உரை நிகழ்த்தியுள்ளார். கல்கத்தா, டிட்டாகரில் நடைபெற்ற தேவாங்கர் மாநாட்டில் தெலுங்கில் உரை நிகழ்த்தினர். மலபார், குத்தாம்பள்ளியில் கன்னடத்தில் உரை நிகழ்த்தி யுள்ளார். இவருடைய சொற்பொழிவு சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் முறையில் எளிய நடையினதாய்ச், சிறு கதைகள் விரவியதாய் இருக்கும். நேரில் அநுபவித்த அநு பவங்களை இடை இடையே சொல்வார்.

குறிப்பிடத்தக்க மாநாடுகள் : இவர் பல மாநாடுகளில் கலந்து கொண்டதன்றிச் சிலவற்றைத் தானே முன்னின்று நடத்தியுள்ளார். திரு. ரா. க. சண்முகம் செட்டியாருடன்

சேர்ந்து கோவையில் தமிழர் மாநாடு நடத்தியுள்ளார். அதனுடன் தமிழ்ப் பொருட்காட்சி ஒன்றும் நடத்தினர். அகில இந்திய தேவாங்க சபையின் இரண்டாவது மாநாட்டைச் செயலாளராக இருந்து கோவையில் சிறப்புற நடத்தினர். 1938ல் சைவ சித்தாந்த சமாஜ மாநாட்டையும் செயலாளராய் இருந்து கோவையில் நடத்தி வைத்தார். தில்லையில் நடைபெற்ற சிவக்கவிமணியவர்களின், பெரிய புராணப் பேருரை வெளியீட்டு நிறைவு விழாவினையும் செயலாளராய் இருந்து நடத்தினர். பம்பாயில் 1922ல் பெசண்ட் அம்மையார் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டார். சைவ சித்தாந்த சமாஜ மாநாட்டில் இரண்டு முறை தலைமை வகித்திருக்கிறர். ஓரியண்டல் மாநாடுகள், சயன்ஸ் சங்க மாநாடுகள், பூவியல் சங்க மாநாடுகள், தொல் பொருள் ஆராய்ச்சிக் கழக மாநாடுகள், ஆகியவற்றில் கலந்து அரிய ஆராய்ச்சியுரை நிகழ்த்தியிருக்கிறர்கள். 1959ல் டில்லியில் நடைபெற்ற ஓரியண்டல் மாநாட்டில் தமிழ்நாடு இடப்பெயர்கள் பற்றிய ஆராய்ச்சியுரை நிகழ்த்தினர். இவருடன் இராமசாமி அடிகளும் சென்றிருந்தார். பேரூர்ச் சாந்தலிங்க மடம், சத்வித்யா சன்மார்க்க சங்கம், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, சாத்தூர் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றிலும் தலைமை வகித்திருக்கிறர். 1958ல் பொள்ளாச்சியில் நடைபெற்ற தமிழ்நாடு எழுத்தாளர் மாநாட்டில் சொற்பொழிவாற்றியுள்ளார். இலங்கையில் 1951ல் நடைபெற்ற சர். பொன்னம்பலம் ராமநாதன் நூற்றுண்டு விழாவுக்கு இவர் சென்று கலந்து கொண்டார்.

நாட்டுப் பற்று:-எந்த ஒரு நாட்டின் வரலாற்றினைப் பெருமையினை அறிந்தாலும், அதைத்தான் பிறந்த நாடாகிய கொங்கு நாட்டுடன் வைத்துப் பார்ப்பது இவருக்கு வழக்கம். கொங்கு நாட்டின் மலைகள், ஆறுகள் கோவில்கள், முக்கியமான சிற்றூர்கள் முதலிய யாவற்றையும் இவர் அறிந்துள்ளார். பெரும்பாலான இடங்களுக்கு இவர் நேரில் சென்றிருக்கிறர். அனேக மலைகளைச் சிகரம் வரை ஏறிப் பார்த்திருக்கிறர். இவர் எழுதிய 'இதுவோ எங்கள் கோவை' 'எங்கள் நாட்டுப்புறம்.

என்னும் நூல்கள் கோவை மாவட்டத்தைப் பற்றிய இவருடைய அறிவையும் நாட்டுப் பற்றையும் நன்கு உணர்த்துவனவாம்.

பேரூர்த் தொடர்பு:-கொங்கு நாட்டிற் சிறந்த ஊர்கள் பல வற்றுள் பேரூர் முதன்மை வாய்ந்தது. இளமை தொட்டே இவர்க்கு இவ்வூருடன் நல்ல தொடர்புண்டு. பட்டிப் பெருமான் திருக் கோவிலில் உள்ள கல்வெட்டுக்கள் இவரைப் பெரிதும் ஈர்ப்பன. சத் வித்யா சன்மார்க்க சங்கமும் இவருடைய பேரூர்த்தொடர்புக்குப் பெரிதும் காரணமாய் இருந்தது. பேரூர் புராண வெளியீட்டில் பேரூரைப் பற்றிய அரிய செய்திகளை ஆய்ந்து கட்டுரைகளாக்கிச் சேர்த்திருக்கிறார். மைசூர் மகாராஜா பேரூருக்கு வரும் போதெல்லாம் இவர் வந்திருந்து அவரை வரவேற்றுக் கோவிலைப் பற்றிய விவரமெல்லாம் அறி விப்பார். சிறந்த வரலாற்றாசிரியராகிய ஹிராஸ் பாதிரியார் 1953ல் கோவை வந்த போது அவரைப் பேரூருக்கு அழைத்து வந்து பேரூர் பற்றிய வரலாற்று விவரங்களை எல்லாம் விளக் கினார்.

சுற்றுப் பயணம்:-பொதுப்பணியின் நிமித்தமாகவும், அலு வல் காரணமாகவும், இவர் பல முறை தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலும், வட நாட்டின் பெரும் பகுதியிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். பல இடங்களைப் பார்க்க வேண்டும் என்னும் அவாவினாலும், தல வழிபாடுகள் செய்ய வேண்டும் எனும் விருப்பத்தினாலும் பல பயணங்களை மேற்கொண்டார். இவருடைய இந்தியப் பயணங்களுள் 1922, 1924, 1927 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட பயணங்கள் குறிப்பிடத் தக்கன. தான் கண்ட தலங்களைப் பற்றிய வரலாறுகளையும், அநுபவங் களையும் எழுதித் தொகுத்து வைத்திருக்கின்றார். இவை சுற்றுப் பயணம் மேற்கொள்வார்க்குப் பெரிதும் பயன்படுவன. இலங் கைக்கு ஆறுமுறை சென்று வந்திருக்கிறார். இலங்கைச் செலவு பற்றி மூன்று நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் 'ஈழுவர் நாங்கள்,' 'கடலில் ஒரு முத்து' என்னும் இரண்டு நூல்கள் அச்சிடப்பட்டன. ஒன்று அச்சிடப்படவில்லை.

பெருமக்கள் தொடர்பு:-கோவை நகரத்துப் பெருமக் களில் திரு. C. S. இரத்தின சபாபதி முதலியார், திரு. ர. க.

சண்முகஞ் செட்டியார் ஆகியோருடன் தொடர்பு கொண்டு தமிழர் மாநாடு, பொருட்காட்சி முதலியன நடத்தினுர். இவருடைய சிறந்த நண்பர் என்று குறிப்பிடத் தக்கவர் சிவக்கவிமணி. திரு. சுப்பிரமணிய முதலியாராவார். முதலியாரவர்களும், கோவை கிழாரும் திரு. சிற்றம்பலம் பிள்ளையிடம் தமிழ் பயின்றவர் என்பதும் இவ்விருவரும் தலைவராகவும், செயலாளராகவும் இருந்து கோவைத் தமிழ்ச் சங்கத்தை நடத்தி வந்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கன. எந்தப் பணியைச் செய்வதாய் இருந்தாலும் இவ்விருவரும் சேர்ந்தே செய்வர். முதலியாரவர்களுடைய வாழ்க்கை வரலாறு இவரால் எழுதப்பட்டது. மற்றும் கண்ணுசாமிக் கவுண்டர், C. R. இராமசாமி ஐயங்கார் இவருடைய நண்பர்கள் என்று குறிப்பிடத் தக்கவராவர். தமிழ்க் கல்லூரியில் பணியாற்றிய வகையில் திரு. நா. மகாலிங்கம், திரு. வெ. சி. சுப்பைய கவுண்டர், தவத்திரு. இராமசாமி அடிகள் ஆகியோர் நெருங்கிய தொடர்புடையவராயினுர்கள். கோவை நகரத்தில் இவர் எல்லாப் பொது நிறுவனங்களிலும், பங்கு கொண்டு உழைத்ததனுல் எல்லாப் பொது மக்களும் இவருடன் தொடர்பு கொண்டவரேயாவர். தமிழகத்தில் உள்ள சைவ ஆதீனங்களெல்லாம் இவரிடம் பெரு மதிப்பு வைத்திருந்தனர். சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் சேர்ந்து பணியாற்றியதனுல் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், திரு. சச்சிதானந்தம் பிள்ளை, T. S. கந்தசாமி முதலியார், சிவகுருநாத பிள்ளை, திரு. வி. க; ஞானியாரடிகள், மறைமலையடிகள், பழனி அரங்கசாமி முதலியார் ஆகியோர் நெருங்கிய தொடர்புடையராயினர். தமிழகத்தில் இவருடன் தொடர்பு கொள்ளாத அறிஞர் ஒருவரும் இலர். இலங்கையில் திரு. அருளம்பலம், திரு நவரத்தினம் அமைச்சர் திரு. நடேசம் பிள்ளை. திரு. மயில்வாகனம் ஆகியோர் தொடர்புடையவராய் விளங்கினர். இவர் இலங்கைக்குச் செல்லும் போதெல்லாம் இவ்விருவரும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து உதவுவர். மலேயாவில் திரு. இராமநாதன் செட்டியார் என்பவர் குறிப்பிடத்தக்க நண்பராயிருந்தார்.

பாராட்டுகளும், பட்டங்களும்:-இவருடைய சேவையை பாராட்டி அரசாங்கத்தார் 1930 ல் ராவ் சாகேப் பட்டமும்

1938ல் ராவ் பகதூர் பட்டமும் அளித்துச் சிறப்பித்தனர். இவர் எழுதிய கொங்கு நாட்டு வரலாறு என்னும் நூல் வெளியானபோது (1954 ல்) பேரூர்த் தமிழ்க் கல்லூரியின் சார்பில் பாராட்டு விழா நடத்திப் பொன்னுடை போர்த்தப்பட்டது. விழாவில் சிவக்கவிமணி அவர்களும் குன்றக்குடி அடிகளாரும் கலந்து கொண்டனர். ஆங்கிலப் பூவியல் சங்கத்தார் இவரை ஒரு உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டு F. R. C. S. என்னும் பட்டம் வழங்கினர். இச் சிறப்புப் பெற்றோர் மிகச் சிலரே என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை மாநிலத் தமிழ்க் கழகம் இவருக்குச் செந்தமிழ்ப் புரவலர் என்னும் சிறப்பு அளித்தது. சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம் சித்தாந்தப் புலவர் என்னும் சிறப்புக் கொடுத்துப் பாராட்டியது. மதுரை ஆதீனகர்த்தர் சைவ ஞாயிறு என்னும் பட்டம் கொடுத்துப் பெருமைப் படுத்தினர். 1957 ல் கொங்கு நாட்டு வரலாறு என்னும் நூலுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரால் பரிசு வழங்கப்பட்டது. இதனைச் சென்னை மாநில ஆளுநர் அளித்தார். 1958 ல் பொள்ளாச்சியில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் இவருக்குப் பொற் பதக்கம் அளித்துப் பாராட்டினர். 1961 ல் கோவை நன்னெறிக் கழகத்தினர் பொன்னுடை போர்த்திப் பொற்பதக்கம் அளித்து மகிழ்ந்தனர்.

குடும்ப வாழ்க்கை:-இவர் B. A. வகுப்பில் பயின்று கொண்டிருந்த போது (1907) பெற்றோர் இவருக்குத் திரு. வெ. அங்கண்ண செட்டியார் அவர்களுடைய மகள் செல்லம்மாளை மணம் முடித்து வைத்தனர். இவர் படித்து முடித்துத் தொழில் தொடங்கிய பின்னர் தனது குடும்ப வாழ்க்கையின் பொருட்டுப் பெற்றோர் சொத்தை எதிர்பாராமல் தனது தொழிலில் வரும் ஊதியத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்தினர். இது அவருடைய கொள்கையாக இருந்தது. தன் குடும்பத்துடன் சேர்ந்து வீட்டிலேயே தேவார திருவாசகங்கள் ஓதியும் தொண்டர் சீர் பரவியும் வார வழிபாடு செய்வார். இங்ஙனம் எல்லாக் குடும்பத்தினரும் செய்ய வேண்டும் என்று இவர் வற்புறுத்துவார். பிற சமயத்தினர் இத்தகைய வழிபாட்டு முறையை மேற்கொண்டுள்ளனர். இவருக்கு ஒரு மகனும், ஐந்து

மகன்களும் உள்ளனர். மூத்த மகன் ,திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவர் தம் தந்தையைப் போலவே சட்டம் பயின்று வழக்கறிஞர் தொழிலிற் புகுந்து படிப்படியாய் உயர்வு பெற்று இப்பொழுது பாண்டிச் சேரியில் மாவட்ட நீதிபதியாய் பணியாற்றுகின்ருர். இரண்டாவது மகன் திரு. மகாதேவன் என்பவர் பொறியியல் பயின்று சென்னையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ருர். இவர் ஞானியாரடிகளிடம் இளஞ்சைவப் புலவர் பட்டம் பெற்றவர். மற்ருெரு மகன் நன்ருகத் தேவாரம் பாடும் பயிற்சி பெற்றிருக்கின்ருர். மூன்று மக்கள் கோவையிலேயே தொழில் செய்து கொண்டிருக்கின்றனர். மகள் வயிற்றுப் பேரனும், மகன் வயிற்றுப் பேரனும் உடன் பிறந்தவர் மகனும் டாக்டர்களாக இருக்கின்றனர். இவருடைய அருந்துணைவியார் 1965 ல் இறைவனடி சேர்ந்தார். — முதிய வயதில் ஏற்பட்ட இந்தத் துயரத்தைத் தாங்கும் ஆற்றலை இவருக்கு இறைவன் நல்குவான்.

அன்ருட அலுவல்:-இவர் நாள்தோறும் புலர்வதன் முன் துயிலெழுவார். காலையில் இறை வழிபாடும் திருமுறை ஓதலும் நடைபெறும். காலை உணவுக்குப் பின் படிப்பதும் எழுதுவதும் வேலை. நண்பகல் உணவுக்குப் பின் ஓய்வு. மாலை நேரத்தில் தன்னைக் காண வருவாரிடம் உரையாடிக் கொண்டிருப்பார். அல்லது நண்பர்களுடன் சிறிது தூரம் உலாவச் செல்வார்.

முன்னெல்லாம் காலை மாலை இரு நேரமும் தவருமல் உலாவச் செல்வார். வழியிற் காணும் காட்சிகளைச் செய்யுளாகவோ, உரைநடையாகவோ எழுதிவிடுவார். நாள்தோறும் ஏதேனும் சொற்பொழிவு இருக்கும். எங்கெங்கு செல்கின்ருரோ அங்கு அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்று விடாமல் எழுதி வைத்து விடுவது இவர்க்கு வழக்கம். மறுநாள் நடக்க வேண்டிய செயல்களை முதல் நாளே வகுத்து எழுதி மேஜையின் மேல் வைத்துக் கொள்வார். அந்தந்த வேலைகள் அந்தந்த நேரத்தில் தவருமல் நடந்து விடும்.

அரும்பண்புகள்:-இவர் எல்லோரிடத்தும் இனிமையாய்ப் பேசுவார். இவரிடமிருந்து யாரும் கடுஞ்சொல் கேட்டிருக்க

மாட்டார்கள். தன்னுல் பிறர்க்கு ஒரு துன்பம் வருவதை இவர் பொறுத்துக் கொள்ள மாட்டார். இவர் கீழ் வேலே செய்த யார் மேலும் இவர் ஒரு முறையும் நடவடிக்கை எடுத்ததில்லே என்பது இவரைப் பற்றிப் பலர் புகழ் நிலே கூறும் உரைகளுள் ஒன்று. எவரையும் எளிதில் நம்பிவிடும் இயல்பினர் இவர். தனக்கு ஒ ந பதவி வேண்டும் என்பதற்காக ஒரு நிறுவனத்தில் இடம் பெற மாட்டார். உண்மையிலேயே தன் சொந்தப் பொருளேச் செலவு செய்தேனும் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு உழைப்பார். அந்நிறுவனத்தால் தான் ஒரு பொருளேயும் எதிர்பார்க்கமாட்டார். தன்னிடத்து வருந்தி வந்தவர்களுக்கு வேண்டியதைக் கொடுப்பார். சிறப்பாகக் கல்வியின் பொருட்டு வரும் ஏழை மாணவர்க்குப் பிறரை இரந்தும் உதவி செய்தார். தன் மக்களிடம் செலுத்தும் அன்பைக் காட்டிலும், மாணவர்களிடம் அதிக அன்பு செலுத்துவார். புத்தகங்களே உயிரினும் மேலாகப் போற்றுவார். புத்தகங்கள், பத்திரிகைகள், நோட்டுக்கள், கடிதங்கள் எல்லாம் ஆண்டு, மாதம், நாள் வரிசைப்படி அட்டை கட்டி ஒழுங்காக அடுக்கப்பட்டிருக்கும். பல ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சி எழுதப்பட்ட ஏடுகளே வெகு எளிதில் கண்டு பிடித்து எடுத்து விடலாம். அவ்வளவு முறையாக அவை அடுக்கப்பட்டிருக்கும். பொதுவாக எளிமை, இனிமை, கனிவு, உழைப்பு, உதவி, இவையே கோவை கிழாரின் உருவம் என்ருல் அது மிகையாகாது.

வாழ்த்து:-இங்ஙனம் பல அரும்பண்புகள் வாய்ந்து பல செயற்கருஞ் செயல்கள் செய்த பலரும் புகழுமாறு நாம் செய்த புண்ணியத்தின் பயனுய் நம்மிடையே வாழ்ந்து வரும் நமது கோவை கிழார், ஒவ்வொருவரும் எங்கள் கோவை கிழார் என்று உரிமை பாராட்டுதற்குரியவர். எங்கள் கோவை கிழார் உடல் நலனும், உள அமைதியும், பல வளங்களும் வாய்ந்து பல்லாண்டுகள் வாழ்க என எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளே வணங்கி நாளும் வாழ்த்துவோம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே!

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

...☼...